admin@dhinakani.com

தின கனி காலை நாளிதழ்

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-2272060 9443699066

கனி பிரின்டிங்

DTP

நாளிதழ் வார இதழ் மாத இதழ்

சிறந்த முறையில் (DTP)செய்து தரப்படும்

நாளிதழ் மந்திலி மேகஸிங் குறைந்த விலையில் பிரின்டிங் செய்து தரப்படும்

தொடர்புக்கு : 94436 99066

மலர்:03 | இதழ்:286 | 4 பக்கங்கள் | 13:05:2026 | புதன்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தாரூ,1825



அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார்
களவின்கண் கன்றிய காத லவர்.

**விளக்கம்:**

ஓர் எல்லைக்குட்பட்டு வாழ்வைச் செம்மையாக அமைத்துக் கொள்ளாதவர்கள், களவு செய்து பிறர் பொருளைக் கொள்வதில் நாட்டமுடையவராவார்கள்.

# சட்டப்பேரவை தலைவராக ஜேசிடி பிரபாகர் பொறுப்பேற்பு: நடுநிலையுடன் செயல்படுமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்



சென்னை: மே-13

தமிழக சட்டப்பேரவைத் தலைவராக ஜேசிடி பிரபாகர், துணைத் தலைவராக ரவிசங்கர் ஆகியோர் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு அதிமுக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வாழ்த்துத் தெரிவித்து சட்டப்பேரவையை நடுநிலையோடு வழிநடத்த வலியுறுத்தினர்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்ற தவெக, சில கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது. இதையடுத்து 17-வது சட்டப் பேரவையின் நிரந்தரத் தலைவர் மற்றும் துணைத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் நேற்று நடைபெற்றது.தவெக சார்பில் பேரவைத்தலைவர் பதவிக்கு ஆயிரம் விளக்கு தொகுதி எம்எல்ஏவான ஜேசிடி பிரபாகரும், துணைத்தலைவர் பதவிக்கு துறையூர் தொகுதி எம்எல்ஏவான ரவிசங்கரும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.வேறு யாரும் வேட்பு மனு தாக்கல் செய்யாததால், பேரவைத் தலைவராக ஜேசிடி பிரபாகர், துணைத் தலைவராக ரவிசங்கர் ஆகியோர் போட்டியின்றி தேர்வாகினர். சட்டப்பேரவை நேற்று காலை 9.30 மணிக்கு கூடியதும், இதற்கான அறிவிப்பு வெளியானது. தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், அவை முன்னவர் செங்கோட்டையன் இணைந்து ஜேசிடி பிரபாகரை பேரவைத் தலைவருக்கான இருக்கையில் அமர வைத்தனர்.அதைத்தொடர்ந்து, பேரவைத் தலைவர், துணைத் தலைவரை வாழ்த்தி அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் பேசினார்கள். அதன் விவரம் வருமாறு:முன்னாள் முதல்வர் பழனிசாமி: மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைப்பது எதிர்க்கட்சிகளின் கடமை. எனவே, எந்தளவுக்கு நீங்கள் எதிர்க்கட்சிகளுக்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கிறீர்களோ, அந்தளவுக்கு உங்கள் அரசு சிறப்பாக செயல்படும்.அதிமுக உறுப்பினர் எஸ்.பி. வேலுமணி: எம்ஜிஆர், ஜெயலலிதாவைப் பின்பற்றி வந்த நீங்கள் மிகவும் பண்பானவர். இந்த பேரவையை நடுநிலையோடு வழிநடத்த வேண்டும். அவையின் மரபையும் காக்க வேண்டும். காங்கிரஸ் உறுப்பினர் ராஜேஷ்குமார்: பேரவை என்பது வெறும் விவாத அரங்கமல்ல. மக்களின் உரிமைகளும், உணர்வுகளும் பிரதிபலிக்கும் ஜனநாயக கோயில். அதை பாதுகாக்கும் வகையில் ஆளும் தரப்புக்கும், எதிர்க்கட்சி தரப்புக்கும் சமநீதியுடன் செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கையுள்ளது. இவ்வாறு அவர்கள் பேசினர். மேலும், சவுமியா அன்புமணி (பாமக), ஆர். செல்லசுவாமி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), ராமச்சந்திரன் (இந்திய கம்யூனிஸ்ட்),வன்னியரசு (விசிக), ராஜேந்திரன்(மதிமுக), பிரேமலதா விஜயகாந்த் (தேமுதிக), காமராஜ் (அமமுக), சையத் பாரூக்பாஷா (ஐயூஎம்எல்), போஜராஜன் (பாஜக), தமிமுன் அன்சாரி (மஜக), நித்தியானந்தன் (கொமதேக) ஆகியோரும் வாழ்த்தி பேசினர்.அதேபோல், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், பாமக நிறுவனர் ராமதாஸ், அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் உள்ளிட்டோரும் வாழ்த்து தெரிவித் துள்ளனர்.

## அசாம் மாநிலத்தில் 2-வது முறையாக முதல்வராக பதவியேற்றார் ஹிமந்த சர்மா



குவாஹாட்டி: மே-13

அசாம் மாநில முதல்வராக ஹிமந்த பிஸ்வா சர்மா இன்று இரண்டாவது முறையாகப் பதவியேற்றுக் கொண்டார். அவருடன் நான்கு எம்.எல்.ஏ.க்களும் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.வடகிழக்கு மாநிலமான அசாமில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியைப் பிடித்துள்ள நிலையில், ஹிமந்த பிஸ்வா சர்மா நேற்று முதல்வராகப் பதவியேற்றார்.பா.ஜ.க-வின் ராமேஸ்வர் தெலி, அஜந்தா நியோக், அசோம் கண பரிஷத் கட்சியின் அதுல் போரா மற்றும் பி.பி. எஃப் கட்சியின் சரண் போரா ஆகிய நான்கு பேரும் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர்.கவுகாத்தியின் கானாபாரா பகுதியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில், ஆளுநர் லட்சுமண் பிரசாத் ஆச்சார்யா, ஹிமந்த பிஸ்வா சர்மாவுக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் பதவிப்பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங், நிதின் கட்கரி, சர்வானந்த சோனோவால், பவித்ரா மார்கெரிட்டா, பா.ஜ.க ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள், துணை முதல்வர்கள் மற்றும் பா.ஜ.க தலைவர் நிதின் நவீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பாரம்பரிய 'கமோசா' (துண்டு) அணிந்து, வேட்டி-குர்தா உடையில் வந்த ஹிமந்த பிஸ்வா சர்மா, அசாமிய மொழியில் பதவியேற்றார். அமைச்சர்களில் தெலி, போரா மற்றும் நியோக் ஆகியோர் அசாமிய மொழியிலும், பி.பி.எஃப் அமைச்சர் சரண் போரா போடோ மொழியிலும் பதவியேற்றுக் கொண்டனர். பதவியேற்பு விழா முடிந்ததும், முதல்வர் மற்றும் அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்துகளை தெரிவித்தார்.இது தொடர்பாக முதல்வர் சர்மா தனது எக்ஸ் பக்க பதிவில்,"அன்னை காமாக்யா, மகாபுருஷ ஸ்ரீமந்த சங்கர்தேவ் மற்றும் அசாம் மக்களின் ஆசியுடன் முதல்வராகப் பதவியேற்றேன். அமைச்சரவை சகாக்களுடன் இணைந்து மக்களின் விருப்பங்களை நிறைவேற்றவும், அவர்களுக்குச் சேவை செய்யவும் காத்திருக்கிறேன். அசாம் மாநிலம் வளர்ச்சியின் புதிய உச்சங்களைத் தொடும்" என்று தெரிவித்துள்ளார்.முந்தைய அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்த அஜந்தா நியோக், வேளாண் அமைச்சராக இருந்த அதுல் போரா மற்றும் போக்குவரத்து அமைச்சராக இருந்த சரண் போரா ஆகியோர் மீண்டும் அமைச்சர்களாகியுள்ளனர். முன்னாள் மத்திய அமைச்சரான ராமேஸ்வர் தெலி, மீண்டும் மாநில அரசியலுக்குத் திரும்பியுள்ளார்.

## "திருட்டு பெரியது என்பதால் பரிசும் பெரியது" - மேற்கு வங்க தலைமைச் செயலர் நியமனம் பற்றி ராகுல் விமர்சனம்



புதுடெல்லி: மே-13

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக அமோக வெற்றி பெற்றது. இதையடுத்து முதல்வராக பொறுப்பேற்ற சுவேந்து அதிகாரி, முன்னாள் தலைமை தேர்தல் அதிகாரி மனோஜ் அகர்வாலை மாநிலத்தின் தலைமைச் செயலாளராக நியமித்துள்ளார்.இது குறித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பாஜக – தேர்தல் ஆணையைத்தின் திருட்டு சந்தையில் திருட்டு எவ்வளவு பெரியதோ, பரிசும் அவ்வளவு பெரியது" என்று கூறியுள்ளார். இந்த நியமனத்தை தற்போது எதிர்க்கட்சியாக இருக்கும் திரிணமூல் காங்கிரஸும் கடுமையாக விமர்சித்துள்ளது.இக்கட்சியின் சாகேத் கோகலே வெளியிட்ட 'எக்ஸ்' பதிவில், "தேர்தல் ஆணையத்துக்காக மேற்கு வங்க தேர்தலை நடத்திய மனோஜ் அகர்வால், புதிய பாஜக அரசால் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பாஜகவும் தேர்தல் ஆணையமும் தேர்தலை திருடியதை இப்போது வெளிப்படையாக ஒப்புக்கொள்கின்றன. இவை நீதிமன்றங்களின் கண்களுக்கு தெரியவில்லையா ?" என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

## தொழிற்சங்கங்கள் தேசிய நலனை முன்னிலைப்படுத்த வேண்டும் என பிரதமர் மோடி வலியுறுத்தல்

சென்னை, மே-13

செகந்தராபாத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, தன்னிறைவு இந்தியா நோக்கில் மக்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். புவிசார் அரசியல் பதற்றங்களால் உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் பாதிக்கப்படும் நிலையில், உள்நாட்டு உற்பத்தி திறனை வலுப்படுத்துவது அவசியம் என்றார். குறிப்பாக, தூத்துக்குடி ஸ்டெர்லைட் காப்பர் ஆலை மூடப்பட்டதால், செம்பை ஏற்றுமதி செய்த இந்தியா இறக்குமதி செய்யும் நாடாக மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். 2023-24 ஆம் ஆண்டில் இந்தியா ரூ.24,552 கோடி மதிப்பில் 3.63 லட்சம் டன் சுத்திகரிக்கப்பட்ட செம்பை இறக்குமதி செய்துள்ளது. 2047க்குள் செம்புத் தேவை 1 கோடி டனாக உயரும் என கணிக்கப்பட்டுள்ள நிலையில், வேதாந்தாவின் ஸ்டெர்லைட் ஆலையை சுற்றுச்சூழல் பொறுப்புடன் மீண்டும் திறப்பது இறக்குமதி சார்பை குறைத்து, 'ஆத்மநிர்பர் பாரத்' கனவை வலுப்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசிக தலைவர் திருமாவளவனை சந்தித்து வாழ்த்து பெற்றார் முதல்வர் விஜய



சென்னை: மே-13

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் இன்று விசிக தலைவர் திருமாவளவனை சந்தித்து வாழ்த்து பெற்றார்.சென்னை வேளச்சேரியில் உள்ள விசிக தலைவர் திருமாவளவனின் இல்லத்துக்கு வந்த முதல்வர் விஜய், அங்கு அவரை சந்தித்து வாழ்த்து பெற்றார். முதல்வர் விஜய்யை வாசலுக்கே வந்து வரவேற்ற திருமாவளவன், அவருக்கு பூங்கொத்து அளித்தார். அதன் பின்னர் முதல்வர் விஜய்யும் திருமாவளவனுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்றார். பின்னர் இருவரும் சிறிது நேரம் உரையாடினார்கள். அதன்பின்னர் திருமாவளவன் அரசியமைப்பின் முகப்புரையை முதல்வர் விஜய்க்கு வழங்கினார். முன்னதாக, மண்ணடியில் இந்திய யூனியன் முஸ்லீம் கட்சியின் அலுவலகத்திற்கு வந்த முதல்வர் விஜய் கட்சியின் தலைவர் காதர் மொய்தீனை சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்த சந்திப்பின்போது ஐயூஎம்எல் தலைவர்களும் உடனிருந்தனர். அதேபோல அதிமுகவில் தனி அணியாக செயல்படும் முன்னாள் அமைச்சர் சி. வி.சண்முகம் அலுவலகத்துக்கு இன்று வந்த முதல்வர் விஜய், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர், இரா.காமராஜ் மற்றும் அதிமுக எம்எல்ஏக்களை சந்தித்துப் பேசினார்.

## ஜோதிடருக்கு அரசுப் பதவி: மாறுபட்ட கருத்துகளுடன் திருமாவளவன், வன்னியரசு சொல்வது என்ன?



சென்னை: மே-13

'முதல்வரின் அரசியல் பிரிவு அலுவலராக ஜோதிடர் ஒருவரை நியமித்திருப்பது சரியல்ல. இது பொதுமக்களிடம் தவறான நம்பிக்கைகளை ஊக்கப்படுத்துவதாகவே அமையும் என்பதால், ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமனத்தை ரத்து செய்ய வேண்டும்' என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேலுக்கு அரசு பதவி வழங்கப்பட்டுள்ளது. முதல்வரின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு. வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், 'முதல்வரின் அரசியல் பிரிவு அலுவலர் நியமனத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் நாடறிந்த பிரபல ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல், தமிழ்நாடு அரசின் முதல்வரின்அரசியல் பிரிவு சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டிப்பது வியப்பளிக்கிறது.தமிழக வெற்றிக் கழகம், தனது முகப்பு பதாகையில் மதச்சார்பின்மை, சமூக நீதி ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" குறட்பாவை கொள்கை நிலையாக அறிவித்துள்ளது. முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் ஆன்மிக வழியில்லாமல் கடவுள் மீதும், வழிபாடுகள் மீதும் நம்பிக்கை கொண்டவராக இருக்கலாம்; அது, அவரது தனிப்பட்ட வாழ்க்கை முறையாகும். ஆனால், மதச்சார்பின்மை பண்புகளை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட அரசு எந்த மதச்சார்பு அடையாளத்தையும் கொண்டிருக்கக் கூடாது என்பது நாடு பின்பற்றி வரும் மரபாகும். அறிவியல் கண்ணோட்டமும், பகுத்தறிவு சிந்தனையையும் வளர்த்து, வலிமைப்படுத்த வேண்டிய அரசு, முதல்வரின் அரசியல் பிரிவு அலுவலராக ஜோதிடர் ஒருவரை நியமித்திருப்பது சரியல்ல.

## ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமனத்தை ரத்து செய்ய இந்திய கம்யூ. வலியுறுத்தல்



சென்னை: மே-13

'முதல்வரின் அரசியல் பிரிவு அலுவலராக ஜோதிடர் ஒருவரை நியமித்திருப்பது சரியல்ல. இது பொதுமக்களிடம் தவறான நம்பிக்கைகளை ஊக்கப்படுத்துவதாகவே அமையும் என்பதால், ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமனத்தை ரத்து செய்ய வேண்டும்' என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேலுக்கு அரசு பதவி வழங்கப்பட்டுள்ளது. முதல்வரின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு. வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், 'முதல்வரின் அரசியல் பிரிவு அலுவலர் நியமனத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் நாடறிந்த பிரபல ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல், தமிழ்நாடு அரசின் முதல்வரின்அரசியல் பிரிவு சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டிப்பது வியப்பளிக்கிறது.தமிழக வெற்றிக் கழகம், தனது முகப்பு பதாகையில் மதச்சார்பின்மை, சமூக நீதி ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" குறட்பாவை கொள்கை நிலையாக அறிவித்துள்ளது. முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் ஆன்மிக வழியில்லாமல் கடவுள் மீதும், வழிபாடுகள் மீதும் நம்பிக்கை கொண்டவராக இருக்கலாம்; அது, அவரது தனிப்பட்ட வாழ்க்கை முறையாகும். ஆனால், மதச்சார்பின்மை பண்புகளை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட அரசு எந்த மதச்சார்பு அடையாளத்தையும் கொண்டிருக்கக் கூடாது என்பது நாடு பின்பற்றி வரும் மரபாகும்.அறிவியல்கண்ணோட்டமும், பகுத்தறிவு சிந்தனையையும் வளர்த்து, வலிமைப்படுத்த வேண்டிய அரசு, முதல்வரின் அரசியல் பிரிவு அலுவலராக ஜோதிடர் ஒருவரை நியமித்திருப்பது சரியல்ல. இது பொதுமக்களிடம் தவறான நம்பிக்கைகளை ஊக்கப்படுத்துவதாகவே அமையும் என்பதால், ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமனத்தை மறுபரிசீலனை செய்து, ரத்து செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு முதலமைச்சரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது' எனத் தெரிவித்துள்ளார்.இதனிடையே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்ட அறிக்கையில், 'அறிவியல் கண்ணோட்டத்தை வளர்க்க வேண்டியது அரசின் கடமை. முதல்வரின் அரசியல் பிரிவு செயலாளராக இன்று அறிவிக்கப்பட்டுள்ள ரிக்கி ராதன் பண்டிட் என்பவர் அடிப்படையில் ஒரு ஜோதிடர்.அரசுச் செலவில் அதிகாரியாக இத்தகைய ஒருவரை நியமித்திருப்பது, மக்கள் மத்தியில் ஜோதிடம் தொடர்பான நம்பிக்கையை அதிகப்படுத்தவே உதவும். "ஜோதிடம் தனை இகழ்" என்றார் பாரதியார். அரசின் இந்தப் பணி நியமனம் ஏற்புடையதல்ல. இவர் அரசியல் ஆலோசனைகளை கூறுவார் என்பதும் ஏற்புடையதல்ல' எனத் தெரிவித்துள்ளார்.



மாநில அளவிலான கயிறு இழுக்கும் போட்டி தென்காசி மாவட்டத்தில் கடந்த 10ம் தேதி நடைபெற்றது கடலூர் மாவட்ட காவல்துறை தலைமை காவலர் நீலமணி ஆயுதப்படை காவலர் பிரவீன்தாஸ் தலைமையிலான அணியினர் பங்கேற்று முதலிடம் பெற்று கோப்பை மற்றும் ரூபாய் 50,000 ரொக்கப் பரிசு வென்ற அணியினரை கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. ஜெயக்குமார் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார் ஆயுதப்படை துணை காவல் கண்காணிப்பாளர் அப்பண்டராஜ், கயிறு இழுக்கும் அணி பயிற்சியாளர் ரமேஷ் உடன் இருந்தனர்.



திருப்பாதிரிப்புலியூர் பெரியநாயகி சமேத பாடலீஸ்வரர் திருக்கோயில் மண்டல அபிஷேக பூர்த்தி விழா. கடலூர் திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு பெரியநாயகி சமய பாடலை சுரத் திருக்கோயில் மண்டலபிஷேக பூர்த்தி விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை முன்னிட்டு கல கலச பூஜை நடைபெற்றது. பஞ்ச மூர்த்திகள் அபிஷேகம் அதனைத் தொடர்ந்து பூர்ணாஹிதி பஞ்சமூர்த்திகள் கலசபிஷேகம் நடைபெற்றது. மூலவர் சுவாமி அம்பாள் கலச அபிஷேகம் நடைபெற்றது. சுவாமி தீப ஆராதனை முடிந்து பெரியநாயகி அம்மனுக்கு அபிஷேகம் தீபாராதணை நடைபெற்றது. பக்தர்களுக்கு அருட்பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் 1000 க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை செயல் அலுவலர் முத்துலட்சுமி மற்றும் உதவி ஆணையர் சிவக்குமார் ஆகியோர் செய்து இருந்தனர்.



ஐம்பொன்னாலான நினைவுத்தூன் 500 கிலோ எடையில் வடிவமைக்கும் பணி ஆப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையை கௌவுரப்படுத்தும் வகையில் கும்பகோணத்தில் வடிவமைக்கும் பணி துவங்கப்பட்டது.. காஷ்மீர் பகுதியில் பஹல்காம் பகுதியில் தீவிரவாதிகள் கடந்த ஆண்டு (2025ம்) நடத்திய கொடூர தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். தீவிரவாதிகளின் இந்த கொடூர தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய ராணுவம் ஆப்ரேஷன் சிந்தூர் என்ற பெயரில் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்களை அழித்தது. இந்திய ராணுவத்தின் துணிச்சலான இந்த செயலை கௌரவப்படுத்தும் வகையில் ஐம்பொன்னால் ஆன நினைவுத்தூண் அமைக்க கடலூரை தலைமையிடமாக கொண்ட ஷைன் இந்தியா சோல்ஜர் வெல்ஃபேர் பவுண்டேஷன் என்ற தொண்டு நிறுவனம் தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி நினைவுத்தூண் வடிவமைக்கும் பணி கும்பகோணம்அருகேமூப்பர்கோயில்பகுதியில்உள்ளசிற்பக்கூடத்திற்குஅனுமதிவழங்கப்பட்டுள்ளது. இந்தஐம்பொன்நினைவுத்தூன்8அடிஉயரமும்500கிலோஎடையும்கொண்டதாகதயாரிக்கப்படுகிறது. 12 சிற்ப கலைஞர்கள் தொடர்ந்து பணி செய்து வருகின்றனர்இந்தத் தூணில் முப்படைகளின் சின்னங்கள் பொறிக்கப்பட உள்ளன. இந்த நினைவுத்தூண் வடிவமைக்கும் பணி ஸ்தபதி குமார் தலைமையிலான குழுவினர் மேற்படி பணிகளை துவங்கி நடத்தி வருகின்றனர். இன்னும் இரண்டு மூன்றுமாதங்களில்பணிகள்முடிக்கப்பட்டு500கிலோஎடையுள்ளஐம்பொன்னால்வடிவமைக்கப்பட்ட நினைவுத்தூண் புதுடெல்லிக்கு கொண்டு செல்லப்பட்டு புதுடெல்லியில் உள்ள இந்திய ராணுவ தலைமை இடத்தில் ஒப்படைக்கப்படும் என ஷைன் தொண்டு நிறுவன நிர்வாகிகள் மற்றும் முன்னாள் படை வீரர்கள் சங்கத்தினர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அதன்படி இந்த நினைவுத்தூண் அடித்தளம்இரண்டடிவிட்டமும்ஒன்னரைஅடிஅகலமும்அவன்மேல்ஒருஅடிபத்மமும்கொண்டதாக இருக்கும். அதற்கு மேல் மையத்தூண் இரண்டு அடியிலும் குங்குமசிமிழ் இரண்டரை அடியிலும் தலை பாகத்தில் குங்குமம் வர்ணம் ஒரு அடியிலும் அமைக்கப்படுகிறது. மையத்தூணில் முப்படைகளின் சின்னங்களும் அமைக்கப்படுகின்றன. ஒட்டுமொத்தமாக 500 கிலோ எடையில் எட்டடி உயர நினைத்தூண் தயாரிக்கப்படுகிறது. மேற்படி நினைவுத்தூண் தயாரிக்கும் பணி முடிவடைந்ததும் புது டெல்லிக்கு எடுத்துச் சென்று இந்திய ராணுவ தலைமை அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்படும் என ஷைன் இந்தியா சோல்ஜர் வெல்பர் பவுண்டேஷன் நிர்வாகி கடலூர் மிலிட்ரி எஸ். பாபு மற்றும் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# கிருஷ்ணகிரி விஜய் இன்ஸ்டிடியூட் சார்பில் செவிலியர் தின விழா கொண்டாட்டம்



கிருஷ்ணகிரி மே13:

ஜனவரி1974இல்,நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கேலின்பிறந்தநாளான மே 12 ஆம் நாளை சிறப்பாக நினைவுகூர முடிவு செய்யப்பட்டு, உலக செவிலியர் நாளை உலக நாடுகளனைத்திலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. செவிலியர்கள் சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பை சிறப்பாக நினைவுகூர இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரியில் உள்ள விஜய் இன்ஸ்டிட்யூட்டில் காமராஜர் கல்வி அறக்கட்டளை சார்பில் உலக செவிலியர் தின விழா கொண்டாடப்பட்டது. விஜய் இன்ஸ்டிட்யூட்டின் நிறுவனர் துரை என்ற துரைசாமி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவின் போது விஜய் இன்ஸ்டிட்யூட்டில் பயிற்சி பெற்று வரும் நர்சிங் மாணவிகளுக்கு உலக செவலியர் தின வாழ்த்தினை தெரிவித்து பூங்கொத்து மற்றும் இனிப்புகளை வழங்கிப் பேசும் போது, இன்று நைட்டிங்கேல் அம்மையாரின் பிறந்தநாளினை செவலியர் தினமாக நாம் கொண்டாடி வருகிறோம், இந்த அம்மையாரை போலநீங்களும்தன்னலம் பார்க்காமல் சமூகப்பணிகளில் சிறந்து விளங்கிட முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அப்போது பேராசிரியை பிரியதர்ஷினி, ஆசிரியர் முகமது ஷரீப், அலுவலர் சத்யா உள்ளிட்ட நர்சிங் பயிற்சி மாணவிகளும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் தமிழ் செல்வன் நன்றி உரையாற்றினார்.



மதுரை மாவட்டம் சிந்தாமணி சின்ன அனுப்பானடி பகுதியில் உள்ள கொடிக்கால் பிள்ளைமார் இனத்தை சேர்ந்த சிவனடியார் ஆதி சிவகுருநாத பிள்ளை வகையறாவிற்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ அங்காளஈஸ்வரி குருநாதஸ்வாமி திருக்கோவிலில் நடைபெற்ற இரண்டாம் நாள் மகா அஷ்ட நிவர்த்தி பரிபூரண ஹோமபூஜையில் தேவ பிரசன்னம் அஸ்த மாங்கல்ய பிரசன்னம் தாம்பூல தேவபிரசன்னம் கணபதி ஹோமம் சுதர்சன ஹோமம் உள்ளிட்ட யாகசாலை பூஜையில் அறங்காவலர் குழு தலைவர் அருணாச்சலம் அறங்காவலர்கள் சேகர் கார்த்திகேயன் சுரேஷ்குமார் அருண்குமார் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது

### ராணிப்பேட்டை மாவட்டத்தில் அதிரடியாக

# அரக்கோணம் புதிய பேருந்து நிலையம் அருகில் இயங்கி வந்த 2 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டது

அரக்கோணம், மே 13

ராணிப்பேட்டை மாவட்டத்தில் அதிரடியாக அரக்கோணம் புதிய பேருந்து நிலையம் அருகில் இயங்கி வந்த 2 டாஸ்மாக் கடைகள் நேற்று மூடப்பட்டது. மேலும் இந்த கடைகளுக்கு வந்த மதுபாட்டில்கள் குடோனுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழக முதல்வர் விஜய் தமிழகம் முழுவதும் 717 டாஸ்மாக் மதுக் கடைகளை மூட நேற்று முன்தினம் உத்தரவிட்டார். இந்த உத்தரவில், பொதுமக்கள் நலனைகருத்தில்கொண்டு வழிபாட்டுத் தலங்கள் அருகில் உள்ள 276 டாஸ்மாக் கடைகள், கல்வி நிறுவனங்கள் அருகிலுள்ள 186 கடைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் அருகில் உள்ள 255 கடைகள் என மொத்தம் 717 டாஸ்மாக் கடைகள் அடுத்த இரண்டு வாரத்திற்குள் மூடப்படும் என்று முதல்வர் விஜய் தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் புதிய பேருந்து நிலையம் அருகில் ஒரே இடத்தில் இரு டாஸ்மாக் கடைகள் இயங்கி வந்தன. இந்த டாஸ்மாக் கடைகள் காலை 12 மணிக்கு திறப்பதற்கு முன்பாகவே அங்கு மது வாங்க குடிமகன்கள் குவிந்து வருவது வழக்கம்.

அது மட்டுமன்றி மதுவைவாங்கிக்கொண்டு புதிய பேருந்து நிலையம் அருகில் கண்ட இடங்களில் குடித்துவி ட்டு அரை நிர்வாணத்தில் விழுந்து கிடப்பதை பொதுமக்கள் பார்த்து முகம் சுளித்தபடி செல்வார்கள் .

அது மட்டுமன்றி போதை தலைக்கு ஏறியதும் குடிமகன்கள் சண்டை இட்டுக் கொள்வார்கள். இதனால் அங்கு பல்வேறு சமூக விரோத செயல்கள் நடந்து வந்தது. இந்த டாஸ்மாக் கடைகளை அகற்ற வேண்டும் என்று பலரும் அதிகாரிகளிடம் நேரிலும் கடிதம் வாயிலாகவும் பலமுறை வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் தமிழக முதல்வர் விஜயின் அதிரடி உத்தரவால் முதல் கட்டமாக அரக்கோணம் புதிய பேருந்து நிலையம் அருகில் இரு டாஸ்மாக் கடைகள் நேற்று அதிரடியாக மூடப்பட்டது. பகல் 12 மணிக்கு கடையை திறக்க வந்த ஊழியர்களிடம் திறக்க வேண்டாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர் . மேலும் கடைக்கு வந்த மற்றும் கடையில் இருந்த மது பாட்டில்கள் குடோனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இங்கு மூடப்பட்ட டாஸ்மாக் கடைகள் வேறு இடத்தில் திறப்பது குறித்தும் அதிகாரிகள் எந்தவித தகவலும் தெரிவிக்கவில்லை.

இதன் காரணமாக இந்த இரு கடைகளிலும் பணியாற்றி வந்த டாஸ்மாக் ஊழியர்கள் பணி என்பது தற்போது வரை கேள்விக்குறியாகி உள்ளது. இங்கு இரு டாஸ்மாக் கடைகள் மூடியது பொதுமக்களிடையே பெரும் மகிழ்ச்சியும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

முதல்வர் விஜய்க்கு அரக்கோணம் மக்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர்.

# மேல்சித்தாமூர் அரசு மருத்துவமனையில் செவிலியர் தின விழா



விழுப்புரம் மாவட்டம், செஞ்சியை அடுத்த மேல் சித்தாமூர் அரசு மருத்துவ மனையில், 12.5.2026 சர்வதேச செவிலியர் தின விழா சிறப்பாக நடைபெற்றது, பாரத்மித்ரன் அறக்கட்டளை மற்றும் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் நீர்நிலைகள் பாதுகாப்பு சங்கம், உலகப்பொதுமறைச்சங்கம் சார்பில் நடைபெற்ற விழாவிற்கு வல்லம் வட்டார அரசு மருத்துவ அலுவலர் இர.பத்மஷா, அனுமதியுடன்,சமூக ஆர்வலரும் பாரத்மித்ரன் அறக்கட்டளை மாநில ஒருங்கிணைப்பாளருமான அகலூர் அ. ஜோலாதாஸ் மற்றும் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் வல்லம் ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி ஆகியோர் ஏற்பாடுகளின் படி, தமிழக நீர்நிலைகள் பாதுகாப்பு சங்க மாநில பொதுச்செயலாளரும், பாரத்மித்ரன் அறக்கட்டளை மாவட்ட பொதுச் செயலாளருமான அறவாழி வரவேற்றார், நிஷாந், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க வடக்கு மாவட்ட செயலாளர் தங்கராசு ஆகியோர் தலைமையேற்றனர், சுருதி, ஜெயஸ்ரீ, சமுதாய சுகாதார செவிலியர் தவச்செல்வி ஆகியோர் குத்துவிள க்கேற்றி விழாவினை துவக்கி வைத்தனர்,வல்லம் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் மரகதவள்ளி, வல்லம் குறுவட்ட மருத்துவ ஆய்வாளர் பாபு, தமிழக சட்ட விழிப்புணர்வு மாநில பொதுச்செயலாளர் அய்யனார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,பாரத்மித்ரன் அறக்கட்டளை வழக்கறிஞர் கா. சக்திவேல், பேச்சாளர் சம்பத்,உலக பொதுமறைச் சங்க மாநில பொதுச்செயலாளர் வல்லம் கிருஷ்ணமூர்த்தி, இளையராஜா, இயற்கை விவசாயி,முரளிகிருஷ்ணன், பரந்தாமன், தேசிங்குராஜா, மூத்த விவசாயி காளப்பன்,ஜங்கால், நடராஜன்,மற்றும் வல்லம் பெண் விவசாயிகள் விஜயா,சுகந்தி, சுதா,ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்,இவ்விழாவில் சித்தா பார்மர்சி வள்ளி மற்றும் மருத்துவ செவிலியர்கள்,கிராம சுகாதார செவிலியர்கள், மக்களைத்தேடி மருத்துவம் செவிலியர்கள் ஆகிய 50 க்கும் மேற்பட்டோர்களுக்கு பச்சை நிற சால்வையால் கௌரவிக்கப்பட்டு கேக்வெட்டி அனைவருக்கும் வழங்கி வாழ்த்து பெற்றனர், விவசாயிகள் சங்க நிர்வாகிகள், அறக்கட்டளை நிர்வாகிகள், நீர்நிலைகள் பாதுகாப்பு சங்க நிர்வாகிகள்,பொதுமக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு செவிலியர்களின் அற்பணிப்பு பணியினைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்கள், ஆய்வக நுட்புநர் விஜயா நன்றி கூறினார்.

### தேனி பேருந்து நிலையம் அருகே உள்ள டாஸ்மார்க் கடைகளை அடைக்க கோரி

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக்குழு உறுப்பினர் இரா.தமிழ் பெருமாள் கண்டன அறிக்கை

தேனி:

தேனி கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையம் அருகே 200 மீட்டர் சுற்றளவில் 5க்கும் மேற்பட்ட அரசு டாஸ்மார்க் மற்றும் FL2 தனியார் மதுபான கடைகள் செயல்பட்டு வருவது பொதுமக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அரசு நிர்ணயித்த நேரத்தை மீறி, விடிய விடிய தங்கு தடையின்றி மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதாக தொடர்ந்து குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றன.




இதன் காரணமாக பெண்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். பேருந்து நிலையம் போன்ற மக்கள் அதிகம் கூடும் பகுதியில் இத்தகைய சட்டவிரோத செயல்கள் நடைபெறுவது மிகுந்த கண்டனத்திற்குரியது. சட்ட ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய அதிகாரிகள் இதை கண்டுகொள்ளாமல் இருப்பது வேதனையளிக்கிறது. இரவு நேரங்களில் நடைபெறும் கட்டுப்பாடற்ற மது விற்பனை சமூக அமைதியை சீர்குலைக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

எனவே, தேனி கர்னல் ஜான்பென்னிகுக்பேருந்து நிலையம் அருகே உள்ள அனைத்து டாஸ்மார்க் மற்றும் FL2 மதுபான கடைகளையும் உடனடியாக அகற்ற வேண்டும். மேலும், இரவு நேர சட்டவிரோத மதுபான விற்பனையை தடுக்க தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வலியுறுத்துகிறோம் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல் பிரிவு செயலாளராக சோதிடர் நியமனம் CPI (ML) மாஸ் லைன் மாநில செயலாளர் கண்டன அறிக்கை

இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினினிஸ்ட்) மாஸ் லைன் மாநிலச் செயலாளர். வெ. யோகேஸ்வரன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், தமிழ்நாடு அரசின் அரசியல் பிரிவு செயலாளராக ரிக்கி ரத்தன் பண்டிட் வெற்றிவேல் சோதிடரை நியமித்துள்ளது கடும்அதிருப்தியை ஏற்படுத்துகிறது. இது முற்றிலும் கண்டனத்திற்குரியது. தமிழ்நாடு என்பது சமூக நீதி, பகுத்தறிவு, மதச்சார்பற்ற தன்மை ஆகிய அடிப்படைகளில் இயங்கும் மாநிலமாகும். இத்தகைய மாநிலத்தில் அறிவியல் மனப்பான்மையையும், நிர்வாகத் திறமையையும் புறக்கணித்து, சோதிட நம்பிக்கையைமுன்னிறுத்தும் வகையில் ஒருவரை அரசு உயர்பதவியில் நியமித்திருப்பது அரசின் பொறுப்புணர்வை கேள்விக்குறியாக்குகிறது.அரசியல் பிரிவு செயலாளர் போன்ற முக்கிய பொறுப்பில் அமர்த்தப்படுபவர் நிர்வாக அனுபவம், கல்வித்தகுதி, சமூகப்பொறுப்புணர்வு மற்றும் பகுத்தறிவுடன் செயல்படக்கூடியவராக இருக்க வேண்டும். ஆனால், சோதிடம் போன்ற அறிவியல் ஆதாரமற்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒருவரை அந்தப் பதவியில் அமர்த்துவது அரசின் செயல்பாட்டை பாதிக்கும் அபாயத்தை உருவாக்குகிறது.



மேலும், இது தமிழ்நாட்டின் பகுத்தறிவு மரபுக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் எதிரான செயலாகும். அரசு இயந்திரம் அறிவியல் மற்றும் தர்க்க அடிப்படையில் இயங்க வேண்டும் என்பது அரசியலமைப்பு வலியுறுத்தும் முக்கியக் கொள்கையாகும். எனவே, தமிழ்நாடு முதல்வர் திரு. ஜோசப் விஜய் அவர்கள் உடனடியாக இந்த நியமனத்தை மறுபரிசீலனை செய்து, தகுதியான, அறிவுப்பூர்வமான மற்றும் நிர்வாகத் திறன் மிக்க நபரை அந்தப் பொறுப்பில் நியமிக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம். இத்தகைய செயல்கள் தொடர்ந்தால், மக்கள் மத்தியில் அரசின் நம்பிக்கைக்கு பாதிப்பு ஏற்படும் என்பதை எச்சரிக்கிறோம். பகுத்தறிவே தமிழ்நாட்டின் முன்னேற்றப்பாதை என்பதை தமிழ்நாடு அரசு புரிந்துகொள்ள வேண்டும் இவ்வாறு அந்த அறிக்கையில்கூறப்பட்டுள்ளது.

# தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் நடத்தும் தேசிய மாணவர் போட்டித் திட்டம் 2026

மத்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சென்னையில் உள்ள தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் நடைபெற்ற தேசிய மாணவர் போட்டித் திட்டத்தின் தொடக்க விழாவில், அதன் இயக்குநர் பேராசிரியர் பாலாஜி ராமகிருஷ்னன் இதுகுறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

"மாணவர் தன்னியக்க நீர்மூழ்கி வாகன போட்டி" என்ற பெயரில் மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சென்னையில் உள்ள தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்தால் நடத்தப்பட்டு வந்த இந்தப் போட்டி, தேசிய மாணவர் போட்டித் திட்டம் என்ற பெயரில் நடத்தப்பட்டு வருகிறது. முன்மாதிரி முயற்சியாக 2011ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் இந்த போட்டி, நீர்மூழ்கி தொழில்நுட்பத் துறையில் திறன் மேம்பாட்டுக்கான தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

இந்தப் போட்டி திறன் வாய்ந்த பொறியியல் மாணவர்களை நீர்மூழ்கி தொழில்நுட்பத்தில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை ஊக்குவிப்பதற்கும், கடல்சார் பயன்பாடுகளுக்கான புதுமைக் கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்கும் உத்வேகம் அளிக்கிறது. இப்போட்டி முற்றிலும் இளநிலைப் பொறியியல் மாணவர்கள் கலந்து கொள்ளும் போட்டியாக நடத்தப்படுகிறது. இந்தப் போட்டி, தன்னியக்க நீர்மூழ்கி வாகனங்களுக்கான வடிவமைப்பு குறித்த கருத்தாக்கம் மற்றும் அதன் உருவாக்கம் போன்ற அம்சங்களில் நடைபெறும்.

2011ம் ஆண்டு இந்தப் போட்டி தொடங்கிய நிலையில், 279 மாணவர் குழுக்கள்பதிவு செய்திருந்தன. இதில் 147 குழுக்கள் முதல்நிலைவடிவமைப்பு அறிக்கையை சமர்ப்பித்துள்ளன. அவற்றில் 80 குழுக்கள் கருத்தாக்க வடிவமைப்பு அறிக்கை வழங்கியுள்ளதுடன், 40 குழுக்கள் இறுதிப் போட்டியில் பங்கேற்றன.

இதுவரை, இந்தியாவில் 40 தன்னியக்க நீர்மூழ்கி வாகனங்கள் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 1,300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கடல் மற்றும் நீர்மூழ்கி தொழில்நுட்பங்களில் அறிவும் அனுபவமும் பெற்றுள்ளனர்.

சர்வதேச அரங்கில் இந்தியாவின் பெருமை

தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் திறமையான இந்திய மாணவ குழுக்கள் அமெரிக்காவின் சான்டியாகோவில் நடைபெறும் சர்வதேச ரோபோசப் போட்டியில் பங்கேற்று சர்வதேச அரங்கில் தங்களது திறமையை நிரூபித்தன.

இந்திய தொழில்நுட்ப நிறுவனம், கரக்பூர் — 2011

பணிமலர் பொறியியல் கல்லூரி, சென்னை — 2012

இந்திய தொழில்நுட்ப நிறுவனம், மெட்ராஸ் — 2014

எஸ்ஆர்எம் பல்கலைக் கழகம், சென்னை — 2015

இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், மும்பை — 2017

இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், மும்பை மற்றும் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், ரூர்க்கேலா — 2019

இறுதிப் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்படும் குழுக்களுக்கு, வடிவமைப்பு, தயாரிப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் கள சோதனைக்காக ஒவ்வொரு நிறுவனம் / குழுவிற்கு தலா ரூ.5 லட்சம் வரை நிதியுதவி வழங்கப்படும். இப்போட்டியில் வெற்றி பெற்று முதலிடம் பெறும் மாணவர் குழுவிற்கு ரூ.1,00,000 இரண்டாம் இடம் பெறும் மாணவர் குழுவிற்கு ரூ. 50,000 ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்ன மத்திய அரசின் செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தன்னிறைவு இந்தியாவை தடுக்கும் சக்திகளை கண்காணிக்க வேண்டும் என மோடி வலியுறுத்தல்

சென்னை, மே 2026

மே 10 அன்று செகந்தராபாத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா தன்னிறைவு நோக்கி முன்னேறும் பயணத்தை மேலும் வலுப்படுத்த மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். தொடர்ச்சியாக நிலவி வரும் புவிசார் அரசியல் பதற்றங்கள் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை பாதித்து, சர்வதேச சந்தைகளில் நிச்சயமின்மையை உருவாக்கி வரும் நிலையில், 'கடமை அனைத்திற்கும் மேலானது' என்ற எண்ணத்துடன் மக்கள் செயல்பட்டு, வலிமையான மற்றும் தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்க பங்களிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். உள்நாட்டு தொழில்துறை உற்பத்தித் திறன் சவால்கள் குறித்து பேசுகையில், இந்தியாவில் செம்பு ஆலைகள் மூடப்பட்டிருப்பதையும் அவர் குறிப்பிட்டார்.தூத்துக்குடியில் அமைந்திருந்த ஸ்டெர்லைட் காப்பர் ஆலை மூடப்பட்டதன் மூலம், இந்தியாவின் செம்பு வர்த்தக நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. ஒருகாலத்தில் செம்பை ஏற்றுமதி செய்த இந்தியா, ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டதையடுத்து செம்பை இறக்குமதி செய்யும்நாடாக மாறியது. சமீபத்தில், 2023 24 நிதியாண்டில், இந்தியா சுமார் 3.63 லட்சம் டன் சுத்திகரிக்க ப்பட்ட செம்பு கேத்தோடை ரூ.24,552 கோடிக்கும் அதிகமான மதிப்பில் இறக்குமதி செய்துள்ளது. இதில், ஜப்பான் மட்டும் மொத்த இறக்குமதியின் மூன்றில் இரண்டு பங்கை வழங்கியுள்ளது.

இந்த துரதிர்ஷ்டமான மாற்றம், பாதுகாப்பு துறையின் மிக முக்கியமான வளமான செம்புக்காக இந்தியாவின் இறக்குமதி சார்பை தொடர்ந்து அதிகரித்துள்ளது. குறிப்பாக, அதிகரித்து வரும் புவிசார் அரசியல் அசாதாரண நிலைகளின் மத்தியில் இது தேசிய பாதுகாப்பு கோணத்தில் கவலைக்குரியதாகும். மேலும், தொழிற்சங்கங்கள் நாட்டின் பெரிய நலனை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்றும், இந்தியாவின் தன்னிறைவு பயணத்தைத் தடுக்கும் எந்த செயல்களிலிருந்தும் விலகி இருக்க வேண்டும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். அவர்கூறுகையில், "இந்தியாவின்தன்னிறைவு நோக்கி செல்லும் பயணத்தைத் தடுக்கக்கூடிய எதிலிருந்தும் நாம் விலகி இருக்க வேண்டும். அத்தகைய சதிகளில் ஈடுபடுபவர்கள் நெருக்கமாக கண்காணிக்கப்பட வேண்டும். இதுபோன்ற சூழ்நிலைகள் உருவாகும் போது, நாட்டின் நீதிமன்றங்களும் தேசிய நலனை முதன்மையாகக் கொண்டு தீர்வுகளை கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன்." என்று தெரிவித்தார். பிரதமரின் இந்த அழைப்பை முன்னிட்டு, நாட்டின் முன்னேற்றத்தைத் தடுக்க முயல்பவர்கள் அதன் பரந்த தேசிய விளைவுகளை உணர வேண்டும். அந்நியச் செலாவணி கையிருப்புகளை பாதுகாப்பதும், இந்தியாவின் நீண்டகால மூலோபாய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் இன்றியமையாத முன்னுரிமையாகும். பல சர்வதேச அமைப்புகளும் நிதி ஆயோக் வெளியிட்டுள்ள கணிப்புகளின்படி, 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் செம்புத் தேவை சுமார் 1 கோடி டன் வரை உயரக்கூடும். மேலும், 2050 ஆம் ஆண்டுக்குள் மொத்தக் கூட்டுத் தேவை 2 கோடி டனைத் தாண்டக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. வேகமாக உயர்ந்து வரும் தேவை மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலி சிக்கல்கள் அதிகரித்து வரும் சூழலில், உள்நாட்டு உற்பத்தித் திறன்களை மீண்டும் செயல்படுத்துவது இந்தியாவுக்கு ஒரு மூலோபாய அவசியமாக மாறியுள்ளது.

சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுடனும், நிலைத்தன்மை கொண்ட முறையிலும் வேதாந்தா நிறுவனத்தின் ஸ்டெர்லைட் காப்பர் ஆலையில் உற்பத்தியை மீண்டும் தொடங்குவது, இறக்குமதி சார்பை குறைப்பதிலும்,

இந்தியாவின் தூய்மை ஆற்றல் மாற்றத்தை வேகப்படுத்துவதிலும் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். இது 'ஆத்மநிர்பர் பாரத்' என்ற தன்னிறைவு இந்தியா கனவை மேலும் வலுப்படுத்தி, எதிர்காலத்தில் இந்தியாவை உலகளவில் போட்டியிடக்கூடிய உற்பத்தி மையமாக நிலைநிறுத்தும்.



வண்டிப் பாளையம் கரையேறவிட்ட குப்பம் அப்பர் திருக்கோயிலில் சித்திரை சதய பெருவிழா மே 2ம் தேதி முதல் மே 11ஆம் தேதி வரை நடைபெற்று வருகிறது. நேற்று மங்கல இசை, கோ பூஜை ,மகா தீபாரதனை, எழுதும் கீழ்க்கணக்கு நம்பர் ஈசனே நிகழ்ச்சியும், நாட்டிய அஞ்சலி நிகழ்ச்சியும், கடல் வழியாக வந்து கரையேறிய இடத்தில் அமைந்துள்ள திருக்குளத்திற்கு தீபாராதனை நிகழ்ச்சியும் ,கைலாய வாத்தியங்களுடன் ஆலய வலம் வந்து அப்பர் ஐக்கிய காட்சியுடன் நிறைவடைந்தது. இந்த நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். பக்தர்களுக்கு அருள் பிரசாதம் அன்னதானமும் வழங்கப்பட்டது.

# கள்ளுக் கடை மறியல் போர்வைக்கம் போராட்டம் வீரியம் பெறச் செய்த வீராங்கனை நாகம்மையார் நினைவு நாள்

கடலூர் மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் வடக்குத்து அண்ணா கிராமம் பெரியார் படிப்பக வளாகத்தில் மாவட்ட மகளிர் அணி தலைவர் முனியம்மாள் தலைமையில் மாவட்ட கழக தலைவர் சொ. தண்டபாணி முன்னிலையில் நாகம்மையார் நினைவு நாள் பரப்புரை கூட்டம் நடைபெற்றது. மகளிர் அணி செயலாளர் விஜயா வரவேற்புரை ஆற்றினார்.



கழகப் பொதுச் செயலாளர் துரை சந்திரசேகரன் நாகம்மையார் படத்தினை திறந்து வைத்து மாலை அணிவித்து சிறப்பு செய்தார். தொண்டறத்தாய் நாகம்மையார் தந்தை பெரியாருடன் காங்கிரஸில் இருந்த போது ஒத்துழையாமை இயக்கம் மற்றும் கள்ளுக் கடை மறியல் போராட்டம் வைக்கம் போராட்டம் போன்ற போராட்டங்களில் அய்யாவை தொடர்ந்து போராட்ட த்தை முன்னெடுத்துச் சென்றவர். போராட்டம் வீரியம் பெறுவதற்கு பெண்கள் பலரையும் போராட்டத்தில் ஈடுபடுத்தி தொண்டாற்றிய வீராங்கனை ஆவார்.

அன்றைய சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராக நியமனம் செய்யப்பட்ட பெண்மணியும் ஆவார்.

தந்தை பெரியாரின் பொதுத் தொண்டுக்கு தோன்றா துணை நின்றவர். பெண் குலத்தின் பொன் விளக்கு அன்னை நாகம்மையார் என்று தமது உரையில் குறிப்பிட்டார்.

நிகழ்வில் அறிவழகன் போஸ்கோ அசோக் வடலூர் நகர கழக அமைப்பாளர் முருகன் பாவேந்தர் விரும்பி அண்ணா கிராம ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் தியாகராசன் கோபால் கருணாநிதி மாவட்ட இளைஞரணி செயலாளர் டிஜிட்டல் ராமநாதன் விழுப்புரம் கழக மாவட்ட செயலாளர் அரங்க. பரணிதரன் ஒன்றிய கழக தலைவர் கனகராசு தமிழ்வேள் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். கிளை கழக செயலாளர் நூலகர் கண்ணன் நன்றி கூறினார்.




## மே 12 உலக செவிலியர் தினம்

கம்பம் அரசு மருத்துவமனையில் உலக செவிலியர் தினத்தை முன்னிட்டு அன்பு அறம் செய் அறக்கட்டளை செவிலியர்களின் அர்ப்பணிப்பு பணியை பாராட்டியும், நிகழ்வுக்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்கள் வாழ்த்துக்களை கூறி இனிப்புகள் வழங்கியும், மருத்துவமனை வளாகத்தில் மரக்கன்றுகள் நடவு செய்தும் செவிலியர் தினம் ொண்டாடப்பட்டது.நிகழ்வில் மருத்துவர் பர்வீன் பேகம், சூரியகுமார், குறித்து செவிலியர் கண்காணிப்பாளர் ராஜாத்தி மற்றும் மருத்துவமனை அனைத்து செவிலியர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாட்டை அன்பு அறம் செய் அறக்கட்டளைநிறுவனர்சுருளிப்பட்டிஅன்புராஜாசெய்திருந்தார்.நிகழ்ச்சிக்குசிறப்புவிருந்தினராகசங்கமம்அறக்கட்டளை சுரேஷ்குமார், கீர்த்தி ஸ்டுடியோ திருக்குமார், ஆனந்த், ஈஸ்வரன், வேல்சரண்,சுருளி, தமிழ்ச்செல்வி, கோகிலா, ஜெயா,கோகிலா முருகேசன் கலந்து கொண்டனர்.




தூத்துக்குடி அண்ணா பேருந்து நிலையத்தில் குற்றங்களை தடுக்கவும் பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பை மேம்படுத்தவும் காவல்துறை சார்பில் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி நிதி பங்களிப்புடன் நிறுவப்பட்ட புதிய சிசிடிவி கேமராக்கள், ஒலிபெருக்கி, அமைப்பை வங்கி துணைத் தலைவர் அசோக்குமார் முன்னிலையில் எஸ்.பி மதன் தொடங்கி வைத்தார்.

ஒகேனக்கலில்

# மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் உணவகங்களில் உணவு பாதுகாப்புத் துறையினர் திடீர் ஆய்வு



தருமபுரி, மே. 13–

தருமபுரி மாவட்ட சுற்றுலா தளமான ஒகேனக்கலில், கோடை விடுமுறை தொடங்கி உள்ள நிலையில் அண்டை மாநிலங்கள், வெளியூரி(மாவட்டம்) களிலிருந்து சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் இயற்கை அழகை பரிசலில் சென்று கண்டுகளிக்கவும், இளைப்பாறி வறுவல் மீன்கள்,மீன் குழம்பு மற்றும் மீன் உணவு வகைகள் அருந்தி செல்கி றார்கள். ஆகையால் ஒகேனக்கலில் விற்கப்படும் மீன்கள் தரம் மற்றும் உணவகங்கள் சுகாதாரம் குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் சதீஸ் உத்தரவின் பேரில் உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் கைலாஷ்குமார் மற்றும் மீன் வளம் , மீனவர் நலத் துறை உதவி இயக்குனர் விஜயராகவன் ஆகியோர் மேற்பார்வை யில் , பென்னாகரம் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் , மீன் வள ஆய்வாளர் திருப்பதி, மேற்பார்வையாளர்மகேந்திரன் மற்றும் பாதுகாவலர்கள் லட்சுமணன், அருண் உள்ளிட்ட குழுவினர் குழுவாக மீன் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலை யங்களில், இருப்பு குடோன்களில் பலதரப்பட்ட திலேபியா, பாறை,வாளை மீன், ரோகு, கட்லா, மீர்கால் ,புல்கெண்டை ,கண்ணாடி கெண்டை என ஆந்திரா ,டேம் மற்றும் உள்ளூர் மீன்களை ஆய்வு செய்தனர். ஒரு விற்பனை கடையில் மட்டும் மிர்கால் வகை மீன்கள் நாள்பட்டு கெடும் நிலையில் இருந்தது.

ஐந்து கிலோ அளவிலானது அப்புறப்படுத்தி விற்பனை யாளருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது.

மேலும் மீன்கள் நீண்ட நாள் கெடாமல் இருக்க பார்மலின் கெமிக்கல் ஏதும் மீன்களில் உள்ளனவா, ஏதும் தெளித்து இருக்க வாய்ப்புள்ளதா என பார்மலின் பரிசோதனை கிட் உபகரணம் கொண்டு உடனடி பார்மலின் பரிசோதனைகள் இருப்பு மீன்கள், விற்பனை மீன்கள் மற்றும் சமையல் செய்யும் இடத்தில் கட் செய்த மீன்கள் எனபல்வேறு இடங்களில் பார்மிலின் கண்டுபிடிக்கும் கிட் கொண்டு கள ஆய்வில் அதில் கிட் உள்ள ஸ்டிரிப் மூலம் சோதனை செய்யப்படும்.

மீனின் சதை பகுதி மற்றும் இதர பகுதி செதில்கள் என பல பகுதிகளில் ஒட்டி நனைத்து எடுத்து பின்பு கிட்டில் உள்ள ரீஏஜென்ட் திரவ சொட்டு விடும் போது மீன்களில் ஃபார்மலின் கலந்து இருக்கும் பட்சத்தில் அந்த ஏட்டில் (ஸ்டிரிட்) நீல நிற கலர் மாறும் , இல்லாத இருக்கும் பட்சத்தில் நிறம் மாற்றமின்றி தோன்றும். ஆய்வில் எந்த மீனிலும் அதாவது ஸ்டிரிப்பில் அவ்வாறான கலர் மாற்றம் நிகழவில்லை . பார்மலின் ஏதும் தெளிக்கப்படவில்லை என உறுதி செய்யப்பட்டது.

ஆவியின் போது நீர் வீழ்ச்சி செல்லும் பாதை, பேருந்து நிலையம் சுற்றி உள்ள பகுதிகள், முதலைப்பண்ணை அருகில் எனபல்வேறு இடங்களில் உணவகங்கள் இறைச்சி மற்றும் மீன்வறுவல் கடைகளில் தீவிரமாக ஆய்வு செய்தபோது பேருந்து நிலையம் அருகில் இரண்டு கடைகளில் இருந்து முறையே பல முறை பயன்படுத்திய எண்ணெய் ஒரு லிட்டர், செயற்கை நிறமூட்டி பவுடர்கள் பறிமுதல் செய்து அப்புறப்படுத்தப்பட்டது. மேற்படி கடை உரிமையாளர்களுக்கு மாவட்ட நியமன அலுவலர் உத்தரவு படி தலா ரூ . 1,000 (ஆயிரம் ரூபாய்) உடனடி அபராதம் விதித்து எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கப்பட்டது.

விற்பனை நிலை யங்களில் மீன்கள் வெயில் படாத வாரும், நீண்ட நேரம் வெயிலில் வைக்காமல் பாதுகாப்பாக ஐஸ் பெட்டியில் வைத்து பராமரித்து விற்பனை செய்யவும், மீன் வறுவல் மற்றும் மசாலா தடவிய மீன் இறைச்சி உரிய கண்ணாடி பெட்டி அல்லது தூசிகள் உள்ளிட்ட அயற் காரணிகள் படாதவாறு பாதுகாப்பாக முறையில் காட்சிப்படுத்திடவும், ஒருமுறை பயன்படுத்திய சமையல் எண்ணெய் மீண்டும் மீண்டும் பயன்படுத்தாமலும் செயற்கை நிலம்மூட்டிகள் கண்டிப்பாக தவிர்க்கவும் எச்சரிக்கை செய்யப்பட்டது. சுற்றுப்புற சுகாதாரம் தன் சுத்தம் மூலப்பொருட்கள் தரமானதாகவும் பயன்படுத்திடவும் அனைத்து உணவு வணிகர்களும் உணவு பாதுகாப்பு சான்றிதழ் பெற்று வணிகம் செய்திடவும் முறையாக புதுப்பித்தல் வேண்டுமென உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் தெரிவித்தார்.



மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார், மதுரை மாவட்ட ஆயுதப்படை பயிற்சி மைதானத்தில் போக்குவரத்துத்துறை சார்பில் பள்ளி வாகனங்களின் வருடாந்திர கூட்டாய்வு பணிகளை துவக்கி வைத்து பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அனைத்து விதிமுறைகளும் முறையாக பின்பற்றப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார். இந்த கூட்டாய்வின் போது பள்ளி பேருந்துகளில் அவசர கால வெளியேறும் வசதி, தீ அணைப்பான், முதலுதவி பெட்டி, வேகக் கட்டுப்பாட்டு கருவி, கண்காணிப்பு கேமரா, GPS கருவி, பள்ளி வாகனம் என்ற அடையாள பலகை, இருக்கை வசதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு அம்சங்கள் அனைத்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. மேலும், வாகன ஓட்டுநர்களின் உரிமங்கள், அனுபவம், உடல்நிலைத் தகுதி மற்றும் வாகனங்களின் காப்பீடு, தகுதிச் சான்றிதழ், மாசு கட்டுப்பாட்டு சான்றிதழ் போன்ற ஆவணங்களும் சரிபார்க்கப்படுகின்றன.

# வேலைவாய்ப்பு அலுவலக பதிவுதாரர்கள் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள் விவரம் குறித்து திருவண்ணாமலை கலெக்டர் தகவல்



திருவண்ணாமலை, மே. 13–

பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள் / பள்ளியிறுதி வகுப்புத் தேர்ச்சி /மேல்நிலைக் கல்வி தேர்ச்சி / பட்டப்படிப்பு கல்வித் தகுதிகள் தேர்ச்சிப் பெற்று, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து தொடர்ச்சியாகபதிவினைபுதுப்பித்து வருபவர்கள் 31.03.2026 ம் தேதியின் நிலவரப்படி ஐந்தாண்டுகளுக்கு மேல் காத்திருப்பவராக இருத்தல் வேண்டும். மாற்றுத்திறனாளி பதிவுதாரர்களாக இருப்பின் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டு முடித்திருக்க வேண்டும். ஆதிதிராவிடர் / பழங்குடியினர் 45 வயதிற்கு மிகாமலும், பிற்பட்டவகுப்பினர் / மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / இதரவகுப்பினர் 40 வயதிற்குள்ளும் இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72000/ (ரூபாய் எழுபத்தி இரண்டாயிரம் மட்டும்)க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு வருமானஉச்சவரம்புஇல்லை, அரசின் பிறதுறை மூலம் உதவித்தொகை பெறுபவர்கள் இந்த உதவித் தொகை பெற விண்ணப்பிக்க இயலாது. ஒரு பதிவுதாரருக்கு ஒரு முறை மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும்.

10ஆம் வகுப்பு தவறியவர்களுக்கு மாதம் ரூ.200/ம், 10வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300/ம், மேல்நிலைக் கல்வி முடித்தவர்களுக்கு மாதம் ரூ.400/ம் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.600/ எனவும், மாற்றுத்திறனாளிகளுக்கு 10 வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள் மற்றும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.600/ம், மேல்நிலை வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ750/ம், பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.1000/ம் உதவித் தொகை வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட தகுதிகள் உள்ளவர்கள் திருவண்ணாமலை, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்திலோ அல்லது www.tnvelaivaaippu.gov.in என்ற வேலைவாய்ப்புத் துறை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்திலோ பூர்த்தி செய்து வருவாய்த்துறையில் வருவாய் ஆய்வாளர் அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக் கணக்குப் புத்தகம், ஆதார் அட்டைமற்றும்அனைத்து கல்விச்சான்றுகள் அசல் மற்றும் நகல்களுடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 29.05.2026க்குள் விண்ணப்பிக்கலாம், மாற்றுத்திறனாளிகளுக்கு வருமானசான்றுதேவையில்லை என்பதால் மேற்குறிப்பிட்ட இதரஆவணங்களுடன் அலுவலக வேலைநாட்களில் நேரில்வருகை புரிந்து விண்ணப்பம் அளித்து சேர்க்கைக்கான அனுமதி பெறலாம் என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு



சென்னை, மே .13–

தமிழ்நாட்டின் முதலமைச்சராக C. ஜோசப் விஜய் அண்மையில் பொறுப்பேற்றுக்கொண்டார் அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் மாநிலத் தலைவர் த.அமிர்தகுமார் தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார். தமிழ்நாட்டின் சங்க வரலாற்றில் 106 ஆண்டுகளை கடந்து வெற்றியுடன் பீடுநடை போட்டுசெயல்பட்டு வருவதும், 167 துறைவாரி சங்கங்களை இணைப்புச் சங்கங்களாக கொண்டுள்ள பேரமைப்பும், தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பொது சங்கமான தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் கீழ்க்காணும் கோரிக்கையினை தங்களின் பார்வைக்காகவும், சாதகமான நடவடிக்கைக்காகவும் அனுப்புகின்றோம்.

மத்திய அரசு தனது அரசில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு விலைவாசி உயர்வினை ஈடு கட்டும் விதமாக அகவிலைப்படி உயர்வினை 58 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தி வழங்குவதாக மத்திய அரசின் அமைச்சரவைகூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு. பார்வையில் கண்டுள்ளவாறு அறிவிப்பும் செய்து அகவிலைப்படி உயர்வினை வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்களுக்கு தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு கோரிக்கைகளை நிறைவேற்றப்படும் என்றதோடு, முதலமைச்சராக பதவியேற்ற பொழுது அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் நலன் தொடர்ந்து காப்பாற்றப்படும் எனக் கூறிய தமிழ்நாடு முதலமைச்சர் C.ஜோசப் விஜய்க்கு தமிழ்நாடு அரசில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள். ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள், சிறப்பு கால முறை ஊதியத்தில் பனிபுரியும் பணியாளர்கள். தொகுப்பூதியம். மதிப்பூதியத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 01.01.2026 முதல் 2 சதவீதம் அகவிலைப்படி உயர்வினை அதாவது 58 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தி வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

அரசுப்பணியில் நேரம், காலம் பாராமல் உழைக்கின்றவர்களுக்கு அகவிலைப்படி உயர்வினை காலம் தாழ்த்தாமல் உடன் அரசு அறிவிப்பு செய்தால் இன்னும் கூடுதல் உத்வேகத்துடன் பணிபுரிவார்கள் என்பதால் தாமதம் இன்றி உடன் அறிவித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று அந்த மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா (12.05.2026) அன்று கருங்கல் பேருந்து நிலைய கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# கட்டுவிரியன் பாம்பு கடித்து காங்கிரஸ் நகர தலைவர் பலி!

தூத்துக்குடி, மே. 13–

கழுகுமலையில், பழைய இரும்பு கடையில் புகுந்த பாம்பு கடித்ததில், நகர காங்கிரஸ் தலைவராகப் பதவி வகித்து வந்த மரியதங்கராஜ் என்பவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை திருமாளிகை தெருவைச் சேர்ந்த மீனாட்சி சுந்தரம் என்பவரின் மகன் மரியதங்கராஜ் (52). இவர் கழுகுமலை சங்கரன்கோவில் சாலையில், தீயணைப்பு நிலையம் அருகே பழைய பேப்பர் மற்றும் இரும்பு வியாபாரக் கடை நடத்தி வந்தார்.

நேற்று மாலை சுமார் 5 மணியளவில், கடையில் இருந்த மேஜைக்கு அடியில் கிடந்த பொருட்களை அவர் அடுக்கிக் கொண்டிருந்தார். அப்போது, அங்கிருந்த பழைய சாக்கு மூட்டைகளுக்கு இடையே பதுங்கியிருந்த கட்டுவிரியன் பாம்பு, எதிர்பாராத விதமாக மரியதங்கராஜின் கையை பலமாக கடித்தது. வலியால் அவர் அலறவே, அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து அவரை மீட்டனர்.

உடனடியாக 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவில் பட்டி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மருத்துவமனையில் அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், மரியதங்கராஜ் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து கழுகுமலை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமி வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். உயிரிழந்த மரியதங்கராஜிற்கு செல்லத்தாய் (47) என்ற மனைவியும், ஒரு மகனும் உள்ளனர். நகர காங்கிரஸ் தலைவர் பாம்பு கடித்து உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# 5 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு தொழிலாளிக்கு 30 ஆண்டுகள் சிறை

நாகர்கோவில், மே. 13–

குமரி மாவட்டம் மருதங்கோடு மடத்துவிளை வீடு பகுதியை சேர்ந்தவர் ரெஜி (வயது 46), தொழிலாளி. இவர் கடந்த 2020ம் ஆண்டு 5 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். வீட்டில் யாரும் இல்லாத போது அத்துமீறி நுழைந்து இந்த கொடூர செயலில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுமியின் பெற்றோர் இதுகுறித்து மார்த்தாண்டம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து ரெஜியை கைது செய்தனர்.

இதுதொடர்பானவழக்குவிசாரணைநாகர்கோவிலில் உள்ள போக்சோ கோர்ட்டில் நடந்தது. வழக்கை நீதிபதி சுந்தரையா விசாரணை நடத்தினார். மேலும் இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு கூறப்பட்டது. அதில், குற்றம் சாட்டப்பட்ட ரெஜியை குற்றவாளி என தீர்மானித்து அவருக்கு 30 ஆண்டுகள் ஜெயில் தண்டனையும், ரூ.13 ஆயிரம் அபராதம் விதித்தும் உத்தரவிட்டார்.

இந்தவழக்குவிசாரணைமற்றும்சாட்சிகள்விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிக்கு தண்டனை வாங்கி தர காரணமாக இருந்த போலீசார் மற்றும் அரசு வக்கீல் ஆகியோரை போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் பாராட்டினார்.

# வால்பாறை அதிரப்பள்ளி சாலையில் காட்டு யானைகள் உலா: வனத்துறையினர் எச்சரிக்கை

வால்பாறை, மே. 13–

கேரளமாநிலம்சாலக்குடிசெல்லும்வழியில்அதிரப்பள்ளி நீர் வீழ்ச்சி பகுதியை ஒட்டிய வனப்பகுதியில் கடுமையான வறட்சி நிலவுகிறது. இதனால் காட்டு யானைகள் குட்டிகளுடன் தண்ணீர் தேடி சாலையை கடந்து ஒரு வனப்பகுதியில் இருந்து மற்றொரு வனப்பகுதிக்கு சென்று வருகிறது.

எனவே வால்பாறையில் இருந்து அதிரப்பள்ளி நீர் வீழ்ச்சிக்கு வாகனங்களில் செல்லும் சுற்றுலா பயணிகள் கவனமாக செல்ல வேண்டும். வழியில் யானைகள் சாலையை கடப்பதை பார்த்தால் யானைகளை தொந்தரவு செய்யவேண்டாம். யானைகள்சாலையை கடந்து செல்லும் வரை காத்திருந்து பின்னர் செல்ல வேண்டும் என்று அதிரப்பள்ளிவனத்துறையினர்எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

# தூத்துக்குடியில் உலக செவிலியர் தின விழா, செவிலியர்களுக்கு விருது வழங்கி கௌரவித்த கலெக்டர்




தூத்துக்குடி, மே. 13–

கைவிளக்கேந்திய காரிகை என்று அழைக்கப்படும் புளோரன்ஸ் நைட்டிங்கேல் பிறந்த நாளான மே 12ம் தினத்தை உலக செவிலியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செவிலியர் பயிற்சி பள்ளி அரங்கில் உலக செவிலியர் தின விழா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் மாவட்ட ஆட்சியர் விஷ்ணு மகாஜன் கலந்து கொண்டு, முதல் நிலை செவிலியர் கண்காணிப்பாளர் அமுதா ராணி, தமிழ்நாடு அரசு செவிலியர் சங்க தூத்துக்குடி செயலாளர் உமா மகேஸ்வரி முன்னிலையில், குத்து விளக்கு ஏற்றி, மருத்துவ துறையில் 25 மற்றும் 30 ஆண்டுகளுக்கு மேலாக சேவை புரிந்த செவிலியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி செவிலியர்களின் ஈடு இணையற்ற சேவைகளை பாராட்டி விழா பேருரை நிகழ்த்தினார்.

முன்னதாக தமிழ்நாடு அரசு செவிலியர் சங்க இணை செயலாளர் செல்வம் வரவேற்புரை ஆற்றினார்.

செவிலியர் பயிற்சி பள்ளி முதல்வர் ஞான முத்து ஜெயந்தி வாழ்த்துரை வழங்கினார்.

விழாவில் கல்லூரி துணை முதல்வர் கலை வாணி, அரசு செவிலியர்கள் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள், செவிலியர் பயிற்சி பள்ளி போதகர்கள், மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

செவிலியர்கள் மற்றும் செவிலியர் பள்ளி மாணவிகளின் பரதநாட்டியம் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor:S.V.KANI RAJA. CALL: 044-22772060,9443699066